www.Padasalai.Net www.TrbTnpsc.com

ASS

**8 - ஆம் வகுப்பு**

நேரம் : 2.30 மணி

# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு - 2025

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள் :100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 14 x 1 = 14

1. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ________ வர்த்தக மையமாக இருந்தது.
   அ) போர்ச்சுக்கீசியர்கள் ஆ) ஆங்கிலேயர்கள் இ) பிரெஞ்சுக்காரர்கள் ஈ) டேனியர்கள்
2. கீழ்க்கண்டவைகளுள் தீரன் சின்னமலையோடு தொடர்புடைய பகுதி எது?
   அ) திண்டுக்கல் ஆ) நாகலாபுரம் இ) புதுக்கோட்டை ஈ) ஓடாநிலை
3. வங்காளத்தில் அரசர் தர்மபாலரால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எது?
   அ) தட்சசீல பல்கலைக்கழகம் ஆ) விக்ரமசீலா பல்கலைக்கழகம்
   இ) பனாரஸ் பல்கலைக்கழகம் ஈ) நாளந்தா பல்கலைக்கழகம்
4. கூற்று : ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.
   காரணம் : அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்.
   அ) கூற்று சரி மற்றும் காரணம் தவறு ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
   இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
   ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை
5. உலக மண் தினம் ________.
   அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5
6. ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் ________ எனப்படுகிறது.
   அ) குடிபுகுபவர் ஆ) அகதி இ) குடியேறுபவர் ஈ) புகலிடம் தேடுபவர்
7. மக்கட்தொகை பரவலை ________ மூலம் காண்பிக்கலாம்.
   அ) கோடுகள் ஆ) வண்ணங்கள் இ) புள்ளிகள் ஈ) சம அளவுக்கோடுகள்
8. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது.
   அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58
9. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?
   அ) பிறப்பின் மூலம் ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்
   இ) வம்சாவளியின் மூலம் ஈ) இயல்பு குடியுரிமை மூலம்
10. பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக விவரிக்கிறது?
    அ) அடிப்படை உரிமைகள் ஆ) அடிப்படை கடமைகள்
    இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் ஈ) அரசியலமைப்பின் முகவுரை
11. சாலை விபத்துகளுக்கான காரணங்கள் யாவை?
    அ) அதிவேகம் ஆ) குடிபோதையில் ஓட்டுதல் இ) ஓட்டுனர்கள் கவனச்சிதறல் ஈ) இவை அனைத்தும்
12. இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ________.
    அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர் ஈ) முதலமைச்சர்
13. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்: முதலீட்டுக் கருவிகள் போன்றவைகள்
    அ) பங்கு வர்த்தகம் ஆ) பத்திரங்கள் இ) பரஸ்பர நிதி ஈ) வரி செலுத்துவது
14. பொதுத்துறை ________ உடையது.
    அ) இலாப நோக்கம் ஆ) சேவை நோக்கம் இ) ஊக வணிக நோக்கம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II. பொருத்துக** 6 x 1 = 6

15.

| | | |
|---|---|---|
| i) அடையாறு போர் | - | மேகங்கள் |
| ii) பாலிகன்ஜ் | - | முதன்மைத் துறை |
| iii) மண் அடுக்கு | - | 1098 |
| iv) நீர் சுருங்குதல் | - | காகித ஆலை |
| v) குழந்தை உதவி மைய எண் | - | அடிப்பாறை |
| vi) வேளாண்மை | - | 1746 |

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

16. இந்தியாவில் இருப்புப்பாதை போக்குவரத்து அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ________.
17. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் ________.
18. ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் ________ ஆகும்.

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

19. அணி சேராமை என்ற சொல்லை உருவாக்கியவர் ________.
20. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ________.

IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக. 5 x 1 = 5

21. இரயத்துவாரி முறை, தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
22. புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பல்வேறு வாயுக்களால் ஆன கலவையாகும்.
23. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன.
24. சாலைகள் மனிதனின் மிக மோசமான கண்டுபிடிப்புகளில் ஒன்று.
25. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்துக் குடிமக்களுக்கான நீதியைப் பாதுகாக்கிறது.

V. வேறுபடுத்துக. 5 x 2 = 10

26. மண்வளப் பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு
27. கோள் காற்றுகள் மற்றும் பருவகாலக் காற்றுகள்
28. இடர் மற்றும் பேரிடர்
29. நில அதிர்வு மற்றும் சுனாமி
30. புவிக்கோள மாதிரி (Globe) மற்றும் புவிப்படம் (Map)

VI. காரணம் கூறுக. 5 x 1 = 5

31. நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவுப் பாறைகள் காணப்படுகின்றன.
32. உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.
33. மலை ஏறுபவர்கள் உயர்ந்த சிகரங்களுக்குச் செல்லும் போது ஆக்ஸிஜன் சிலிண்டர்களை எடுத்துச் செல்கின்றனர்.
34. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.
35. எகிப்து 'நைல் நதியின் நன்கொடை' என அழைக்கப்படுகிறது ஏன்?

VII. சுருக்கமாக விடையளி (எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி). 10 X 2 = 20

36. இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.
37. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்பு கூறுகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.
38. 'திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின்' முக்கியத்துவம் யாது?
39. மார்கண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
40. 'இடம் பெயர்தல்' – வரையறு.
41. தொழிற்சாலை – வரையறு.
42. காணிப் புவிப்படங்களின் பயன்கள் யாவை?
43. குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக.
44. கல்வி உரிமைச் சட்டம் பற்றி எழுதுக.
45. தேசிய பாதுகாப்பு மிக அவசியமானது ஏன்?
46. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?
47. சமூக – பொருளாதார மேம்பாட்டை அளவிடும் சில குறியீடுகளின் பெயர்களைக் கூறுக.

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

VIII. விரிவான விடையளி. 4 x 5 = 20

48. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக. (அல்லது)
கோத்தாரி கல்விக் குழுவின் முக்கியமானப் பரிந்துரைகளைச் சுட்டிக் காட்டுக.
49. நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக விவாதிக்க. (அல்லது)
தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளை விளக்குக.
50. குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை? (அல்லது)
சாலை விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?
51. வங்கி வைப்புகளின் வகைகளை விவரி. (அல்லது)
பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

IX. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் (India Outline Map) குறிக்கவும். 10 x 1 = 10

i) பஞ்சாப் ii) ஜான்சி iii) நாளந்தா iv) பிளாசி v) ஜாம்ஷெட்பூர்
vi) வார்தா vii) பர்தோலி viii) பம்பாய் ix) கள்ளிக்கோட்டை x) இந்தியப் பெருங்கடல்

X. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5

i) ஆசியா ii) ஆப்பிரிக்கா iii) கடகரேகை iv) குளிர் மண்டலம் v) பசிபிக் பெருங்கடல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com